## வகுப்புவாதிகளின் அராஜகம்!

உத்தரப் பிரதேசத்தில் ஆன்மிகத்தின் பெயரால் நடத்தப்படும் கலவரங்களுக்கு, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'கன்வார் யாத்திரை'யும் விதிவிலக்கு அல்ல என்கிற வகையில், சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த ஆன்மிக யாத்திரை சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தும் நிகழ்வாக மாறி உள்ளது.

உத்தரகண்ட் மாநிலத்தில் புறப்படும் இந்த கன்வார் யாத்திரை, ஒடிசா மாநிலம் வரை நீள்கிறது. உத்தரப் பிரதேசத்தில், இஸ்லாமியர்கள் குவிந்து வாழும் முசாபர் நகர், மீரட், காசியாபாத், முராத்நகர் ஆகிய நகரங்கள் வழியாக இந்த யாத்திரை செல்கையில், பக்தர்கள் போர்வையிலான வகுப்புவாதிகள் இஸ்லாமியர்களைத் தாக்குவது, உடைமைகளைச் சேதப்படுத்துவது என்ற வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

ஒவ்வோர் ஆண்டும் உச்ச நீதிமன்றம் தானாக முன் வந்து, பா.ஜ.க. அரசைக் கண்டிப்பதும் நடக்கிறது. இந்த ஆண்டும், கன்வார் யாத்திரைக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைக் கண்டித்ததுடன், பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், அந்த மாநில அரசுக்கு உத்தரவிட்டது. ஆனாலும், பக்தர்கள் போர்வையிலான மதவாதக் கும்பல்கள், கலவரங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர்.

பொதுமக்கள், காவல்துறை வாகனங்களைச் சேதப்படுத்துவது, சிறுபான்மையினர் கடைகளைச் சூறையாடுவது என தினமும் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த மாநில அரசு இந்தச் சம்பவங்களைத் தடுக்காமல் வேடிக்கை பார்க்கிறது என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. ஆன்மிகப் போர்வையிலான குற்றவாளிகளைப் பாதுகாப்பதே பாரதிய ஜனதா கட்சிதான் என்கிறபோது, அவர்களிடமே நீதி எதிர்பார்க்க முடியாது. உச்ச நீதிமன்றமும், மக்கள் மன்றமும்தான் இதைத் தடுக்கவேண்டும்.

## :ப்ளாஷ்பேக்





எஸ்.வி.சுரேஷ்

### வெண்சீருடை அணிவகுப்பு!

2007-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாநாடு மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. அப்போது, நான் திருநெல்வேலி மாமன்ற உறுப்பினராக இருந்தேன். மாவட்ட வாரியாக, இளைஞர் அணியினர் மேற்கொண்ட அணிவகுப்பினை அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்கள். அப்படிப்பட்ட மகிழ்ச்சியான தருணத்தில், நான் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. கழகத் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.இராசா, மா.சுப்பிரமணியன், சேலம் இரா.இராஜேந்திரன் ஆகியோர் உடனுள்ளனர்.

**– எஸ்.வி.சுரேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் மற்றும் மாமன்ற முன்னாள் உறுப்பினர், திருநெல்வேலி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ஆசிரியர்கள் மீது கரிசனம்!

1958-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட தி.மு.க.வின் மூன்றாவது மாநாடு திருவாரூரில் நடைபெற்றது. மாநாட்டின் முதல் நாள் இரவு கலைஞரின் 'உதயசூரியன்' நாடகம் நடத்தப்பட்டது. 'மு.கருணாநிதி எம்.எல்.ஏ நடிக்கும் புதுமை நாடக மன்றத்தாரின் 'உதயசூரியன்' நாடகம் நடைபெறும்' என விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றாக சிற்றூர்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், பஞ்சாயத்து ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை உயர்த்த வேண்டும், ஊதியங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** **22**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**



## சாதிகளும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பும்!

*செயல் வலிமை, தன் வலிமை, பகை வலிமை, துணை வலிமை ஆகியவற்றை ஆராய்ந்தறிந்து ஈடுபடும் செயல் தோற்காது. இந்திய சாதியச் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு சாதிகளின் வலியையும் வலிமையையும் ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள் பதிவு செய்துள்ளன. அவை, அந்தக் காலத்தில் இருந்த சாதியக் குழுக்களின் தன்னிலையை வெளிச்சம் போட்டுக்காட்டின. அது மட்டுமின்றி, சுதந்திர இந்தியாவில் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்படாததால், இன்றுவரை அந்த அறிக்கைகள் ஒளிவிளக்காகப் பயன்படு கின்றன.*

*பிரிட்டிஷ் இந்தியாவில் 1871-ஆம் ஆண்டில் முதன்முதலாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. மக்கள்தொகைக் கணக்கெடுப் பின் போது சாதிகளை அட்டவணைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்களை அன்றைய அரசின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரிகள் எதிர்கொண்டனர். அவற்றில் முக்கியமானது மக்களின் உண்மையான சாதி எது என்று கண்டறியும் சிக்கல். ஏனெனில், தங்கள் சாதிப்பெயர் என்னவென பெரும்பான்மையான மக்களுக்குத் தெரியவில்லை.*

*சமூக அடுக்கில் உயரத்தில் இருந்த சாதி யினர் 'லாலா' உள்ளிட்ட மரியாதை மிக்கப் பெயர்களால் அழைக்கப்பட்டனர். அதே வேளையில், ஒடுக்கப்பட்ட சாதியினர் மிக இழிவான பெயர்களால் அழைக்கப்பட்டனர். சமூக அந்தஸ்தில் இடைநிலையில் இருந்த சாதிகள் தொடங்கி, கீழ்நிலையில் இருந்த சாதிகள் வரை தாங்கள் உயர்மரபு வழியைச் சேர்ந்தவர்கள் என்று கோரினர். பொதுவாக, இரு பிறப்பாளர் வர்ணங்கள் என்று மனுஸ்ருமிதியில் குறிப்பிடப்படும் 'ஷத்திரியர்' அல்லது 'பிராமணர்' மரபுவழியைச் சேர்ந்த சாதியினர் என்பதால், அதற்கேற்ற வகையில் தங்கள் சாதிபெயர்களை மாற்றிக் கொள்ள வேண்டினர்.*

> **இன்றைய உத்தரப் பிரதேச அரசின் பகுப்பாய்வு அடிப்படையில் அகாரியா சாதி, பட்டியல் சாதிகள் அட்டவணையிலும், கோலா தாக்கூர், லுனியா, குஜ்ஜார் சாதிகள் பிற்படுத்தப்பட்ட சாதிகள் அட்டவணையிலும் இடம்பிடித்துள்ளன.**

*எடுத்துக்காட்டாக, அன்றைய உத்தரப் பிரதேசத்தின் மிர்சாபூர், புலந்தசகர் பகுதிகளில் வாழ்ந்த அகாரியா, கோலா தாக்கூர், லுனியா, சமர், குஜ்ஜார் என்ற பெயர்களில் அழைக்கப் பட்ட சாதியினர் தங்களை ராஜ்புத், ஷத்திரியா ஆகிய உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று அழைத்துக் கொண்டனர். ஆனால், உண்மையில் அவர்கள் உயர் வகுப்பினைச் சேர்ந்தவர்களா? இன்றைய உத்தரப் பிரதேச அரசின் பகுப்பாய்வு அடிப்படையில் அகாரியா சாதி, பட்டியல் சாதிகள் அட்டவணையிலும், கோலா தாக்கூர், லுனியா, குஜ்ஜார் சாதிகள் பிற்படுத்தப்பட்ட சாதிகள் அட்டவணையிலும் இடம்பிடித்துள்ளன.*

*பார்ஹை, லோஹர், விஸ்வகர்மா, ப்ஹார், ப்ஹாட் போன்ற சாதிகள் தங்களை 'பிராமணர்' என்று கோரின. இந்தச் சாதிகள் இன்று பிற்படுத்தப்பட்ட சாதிகள் அட்டவணையில் இடம் பிடித்துள்ளன. மேல்வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் என்று அழைத்துக்கொண்ட சாதிகளின் பட்டியல் மிக நீண்டது.*

*நாங்கள் உயர் வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கோரிய இந்தப் போக்கு வங்காளம் போன்ற ஏனைய மாகாணங்களைப் போன்று ஐக்கிய மாகாணத்திலும் தொடர்ந்தது.*

*கல்வி கற்றோர் நிலையை ஒப்பிட்டால், 1911-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக் கெடுப்பின்படி, 1,000 பேரில் 119 பிராமணர் களும், 329 காயஸ்தாக்களும், 236 அகர்வால்களும் கல்வியறிவு பெற்றிருந்தனர். இவர்களோடு ஒப்பிடுகையில், சமர் (1), டோபி (2), லூனியா (6), லோஹர் (12), பார்ஹை (12) போன்ற சாதிகளின் கல்வி நிலை மிகத் தாழ்ந்திருந்தது. ஏனைய சூத்திரச் சாதிகளோடு ஒப்பிடுகையில், பிராமணர்களின் கல்வியறிவு நிலை பன்மடங்கு மேம்பட்டிருந்தாலும், காயஸ்தா, அகர்வால் போன்ற மற்ற இருபிறப்பாளர் சாதிகளை விட, பின்தங்கி இருந்தனர். ஆக உயரடுக்கில் வேறுபட்ட இரு அடுக்குகள் இருந்தன என்பது மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.*

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** **22**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## கலைஞர் சிந்திய இரத்தம்!

*திராவிடர் கழகம் ஆதிக்கத்திற்கு எதிரான, மூடத்தனத்திற்கு எதிரான அறிவியக்கம். பெரியாரின் கருத்துகளால், சிந்தனைகளால் செதுக்கப்பட்ட பரப்புரை இயக்கம். எந்த இடத்திலும் வன்முறைக்கோ, பலாத்காரத்திற்கோ இடம் கொடுக்காத இயக்கமாகவே திராவிடர் கழகத்தை இயக்கினார் பெரியார். ஆனாலும், திராவிடர் கழகம் வன்முறைகளையும், பலாத்காரத்தையும் எதிர்கொண்டே வந்தது என்பதுதான் வரலாறு. அதில் முத்தமிழறிஞர் கலைஞர் தவிர்க்க இயலாதவர். 1945-ஆம் ஆண்டு ஜூலையில் புதுச்சேரியில் நடைபெற்ற திராவிடர் கழக விழாவின் போது, எதிரிகளால் வீதிகளில் வைத்து கொடுந்தாக்குதலுக்கு உள்ளானவர் கலைஞர். அங்கு சிந்திய இரத்தம்தான், பெரியாரின் ஈரோட்டு குருகுலத்தில் கலைஞரைக் கொண்டு சேர்த்தது.*

*அரசியல் வாழ்வில், அதன்பிறகும் எத்தனையோ முறை கலைஞர் இரத்தம் சிந்தியிருந்தாலும், அடுத்த சில மாதங்களில் சிந்திய இரத்தம் கலைஞரின் வரலாற்றிலும், திராவிடர் கழக வரலாற்றிலும் தவிர்க்க இயலாதது. அந்த வரலாறு எழுதப்படுவதற்கான விதை ஊன்றப்பட்டது, 1945 - ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் தேதி திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில்தான். 1944 -ஆம் ஆண்டில் சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், நடைபெற்ற திராவிடர் கழகத்தின் முதல் மாநில மாநாடு இது. புத்தூர் மைதானத்தில் நடைபெற்ற இம்மாநாட்டை என்.அர்ச்சுனன் திறந்து வைத்தார்.*

*மாநாட்டில் பாடுவதற்காக பென்னாகரம் நடேசன் பாடல் ஒன்றை இயற்றினார். **"இன்னும் என்ன செய்யப் போறீங்க? சொல்லுங்க நீங்க!"** என்ற அந்தப் பாடலின் சந்தம், பெரியாரை வெகுவாகக் கவர்ந்தது. தாமே மெட்டமைத்துப் பாடியும் பார்த்தார் பெரியார். நன்றாக இருந்ததால், மகிழ்ந்துபோன பெரியார் 10,000 பிரதிகள் அச்சடித்து, மாநாட்டில் அந்த பாடலை விநியோகம் செய்தார். பலரிடமும் பாராட்டைப் பெற்றது அப்பாடல்.*

*"திராவிடர் கழகத்தின் நிரந்தரத் தலைவர் பெரியார்" என்ற தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டது. 'திராவிட நாடு' ஏன் தேவை என்பது பற்றி, பேரறிஞர் அண்ணா நீண்டதொரு உரை நிகழ்த்தினார். "தனிச் சுதந்திரத் திராவிட நாடு வேண்டும், தேர்தல் புறக்கணிப்பு" என இரு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. **'திராவிடர் விடுதலைப் படை'** என்பதாக ஒரு தொண்டர் படை அமைக்கப்படும், என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்படியே பின்னாளில் மதுரையில் கருப்புச்சட்டைப் படை மாநாடு நடத்தப்பட்டது.*

*நீதிக் கட்சியின் கொடியான **'தராசுக்கொடி'** கடைசியாக ஏற்றப்பட்டது இந்த மாநாட்டில்தான். தராசுக் கொடியை ஏற்றிவைத்துப் பேசிய அம்மையார் **'மிராண்டா' கஜேந்திரன்,** "இக்கொடியில் இருக்கும் செங்குருதியொத்த நிறத்தை வரவேற்கிறேன். ஆனால், 'தராசு சின்னம்' எதற்காக? நாம் வேண்டுவது தலைகீழ் மாறுதல். ஆரியத்தை சின்னாபின்ன மாக்கும் ஒரு சின்னம் வேண்டும். அது தராசு இல்லை" என்று முழங்கினார். அதன்பிறகு 16.12.1945 அன்று சென்னை நிர்வாகக் கமிட்டியில் கொடி வடிவமைக்க தீர்மானம் இயற்றப்பட்டது.*



ஓவியம் : சிகரன்

> **அந்த கருப்பு - சிவப்பு நிறக்கொடிதான் பெரியாரால் அதிகாரப்பூர்வமாக ஏற்கப்பட்டது, இன்றும் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது!**


*ஈரோடு சண்முகவேலனார் வடிவமைத்த கொடி, பல தோழர்களால் ஆமோதிக்கப்பட்டது. கொடிக்குச் சிவப்பு நிறம் தேவைப்பட்டபோது, தனது விரலை, குண்டூசியால் குத்தி, இரத்தத்தை சிவப்பாகப் பூசினார் கலைஞர். அந்த கருப்பு-சிவப்பு நிறக்கொடிதான் பெரியாரால் அதிகாரப்பூர்வமாக ஏற்கப்பட்டது, இன்றும் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது...*

**...கூட்டம் திரளும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**555**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




**-வாழ்வோம்**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131